Koviloor Digital Library

வெளியீடு எண் 127.

சிவஞானசுவாமிகள் - - இரட்டைமணிமாலை





திருவாவடுதுறை ஆதீனம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் இரட்டைமணிமாலை

ஆசிரியர் –

பாண்டித்துரைத்தேவர்

Koviloor Digital Library

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை. —

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திராவிடமாபாடிய கர்த்தராகிய

சிவஞானசுவாமிகள் - - இரட்டைமணிமாலை

(பொழிப்புரையுடன்)

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
21-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
பதிக்கப்பெற்றது.

1959

Koviloor Digital Library

உ
சிவமயம்

வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள்.

Koviloor Digital Library



திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்

முகவுரை

"ஆனந்த வாழ்வில் அடியாரெல் லாரும் அகங்களிப்ப
நானிந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதல்நன்றோ
வானந்த நீண்ட மதிலா வடுதுறை வாழ்முதலே
தேனுந்து பங்கயத் தாளாய் பஞ்சாக்கர தேசிகனே"

—பஞ்சாக்கரதேசிகர்மாலை.

சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை என்னும் இத்தோத்திரச் சிறுநூல், பாண்டித்துரைத் தேவரவர்களால் பாடப்பெற்றது. இந்நூலை ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் 120-வது குருபூசைத் திருவிழாவிலே (1905) தேவரவர்கள் இயற்றி மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே அரங்கேற்றினார்கள். தேவரவர்களுக்குத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திலும், சிவஞான சுவாமிகளிடத்திலும் இருந்த பத்தியும் ஈடுபாடும் மிக அதிகம். அங்கங்கே சுவாமிகள்பால் தேவரவர்கள் கொண்டுள்ள பத்தி வெளிப்பட்டுப் படிப்போருக்கு இன்பம் பயப்பிக்கின்ற பாடல்களாகப்போந்து இதன் கண் மிளிர்கின்றன.

சுவாமிகள் வரலாறும், நூலாசிரியர் வரலாறும் நன்கு தெரிந்தாலன்றிக் கற்போருக்கு நூலின்கண் மனவெழுச்சி செல்லாதாகலின்

Koviloor Digital Library

அவைகளை முன்னர்ச் சேர்த்திருக்கின்றேன். இக்காலத்துப் படிப்போருக்கு இன்றியமையாததெனக்கருதி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் கட்டளையிட்டருளியபடி பொழிப்புரையும் புதிதாக எழுதியிருக்கிறேன்; சரிதக்குறிப்புக்களும், அரும்பதக் குறிப்புக்களும் உள்ளன.

திராவிடமாபாடியத்தைஉணர்ந்தமேலோர் மற்றைச் சமய நெறியிற் சென்று சேரார், அற்பர் வாயிலிற் சென்று வயிற்றை ஓம்பும் பொருட்டு இரந்து திரியாமல் சுவாமிகளுக்கு ஆட்படுதல் மேலானது, இளமைத் துறவை அறிந்துவைத்தும் பயனில்லாத காரியங்களைச் செய்து காலத்தை வீணே போக்கலாகாது, சிவஞானபாடியங் கற்றறிந்தாருக்கு அறியாமை அகலும், சுவாமிகள் திருவங்கங்கள் பயன்பட்ட முறை, அகத்தியர்வரத்தால் சுவாமிகள் அவதரித்தமை, செந்தமிழ் மொழியிலே பாடியம் செய்தருளியமை, புதல்வர் முதலியன பெற விரும்புவோர் தெரிந்துகொள்ள வேண்டியவை, ஆசை அறும்படி அநுக்கிரகிக்க வேண்டல், ஆன்மாக்களின் ஆணவக்கதவம் அற்றபடி, சிவசமவாதவுரை மறுப்பு - இலக்கணவிளக்கச் சூறாவளி - சித்தாந்தமரபு கண்டன கண்டனம்-தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி முதலியவைகளால் மக்கள் அறிவுக்குப் பெருவிருந்தளித்தருளியமை முதலிய பல செய்திகளை இந்நூல் நன்கு உணர்த்தும்.

Koviloor Digital Library

இந்நூலாசிரியர் பாட்டுடைத் தலைவரைத் தேசிகர் எனக் குறிப்பிடுவது ஆதீனமரபன்று; ஆயினும், சிவஞானச் செல்வராகலின் முன்னோராகிய ஸ்ரீ கச்சியப்பமுனிவர் முதலியோர் சென்ற நெறிபற்றிச் சில இடங்களில் இவர் பாராட்டிக் கூறியிருக்கின்றார். பிற செய்திகள் இந்நூலைப் படிப்போருக்கு எளிதில் விளங்குவனவேயாம்.

இவ்வாதீனத்திலே இப்பொழுது இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானமாக விளங்கி, சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனங்களைச் சிறந்த முறையில் நடைபெறச்செய்து பெரும் புகழுடன் வீற்றிருக்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகள்** ஞானபீடத்தில் எழுந்தருளிய காலம்முதல் இப்பாட்டுடைத் தலைவருடைய ஆசிரியர் ஸ்ரீ பின் வேலப்ப தேசிகர் குருமூர்த்த தரிசனமும், மாணிக்கவாசக மூர்த்திகள் தரிசனமும் செய்து சிவஞானம் பெருக்கிவருவது யாவராலும் பாராட்டுதற்குரியதாம்.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி—

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

ஆதீனவித்துவான்.

திருவாவடுதுறை
9—4—1959

Koviloor Digital Library

ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகள் வரலாறு

சந்தனப் பொதியத் தடவரைச் சார்பில் மகத்துவமிக்க அகத்திய முனிவர் வரத்தால் தோன்றிய மகான் சிவஞான சுவாமிகள். இவர்கள் பிள்ளைத் திருநாமம் முக்களாலிங்கர். இவர் அவதரிக்கத் தவஞ் செய்தது விக்கிரமசிங்கபுரமேயாம். தந்தையார் ஆநந்தக்கூத்தர், தாயார் மயிலம்மையார் என்பவர்கள். இவர், இளம்பருவத்திலேயே திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து துறவு பெற்றூர்; வடமொழிக்கடலும் தமிழ் மொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்தார்; பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ வேலப்பதேசிக மூர்த்திகள் (1769) காலத்திலே பேரூர்-ஸ்ரீ வேலப்பதேசிகர்பால் ஞானோபதேசம் பெற்றுச் சிறந்தார்; இலக்கண இலக்கியங்கள், தர்க்கம், சித்தாந்த சாஸ்திரங்கள் இவைகட்குச் சிறந்த உரை கண்டருளினர்; சாத்திரவரம்பு கடந்து பிறர் செய்த உரைகளையெல்லாம் காரணங்காட்டி மறுத்து நல்லுரையை நாட்டினர்; சிவஞானபோதத்துக்குச் சிற்றுரையும், மாபாடியமும் தமிழில் வரைந்தருளினர்; தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதற் சூத்திரவிருத்திகள் செய்தனர்; இலக்கண விளக்கத்தைச் சூருவளியாற் சுழலவிடுத்தனர்; நன்னூலுக்குப் புத்தம் புத்துரை செய்தருளினர்; தர்க்க சங்கிரக அன்னம்பட்டீயம், சிவதத்துவவிவேகம், சுலோக

Koviloor Digital Library

பஞ்சகம் முதலியவற்றைத் தமிழில் மொழிபெயர்த் தருளினர்; அரிய சிறுநூல்கள் பல செய்தளித்தனர்; காஞ்சிப்புராண முதற்காண்டத்தைச் சிறக்க இயற்றி யருளினர்; இன்னோரன்ன பலவகைப்பட்ட அணி கலன்களால் செந்தமிழ்ச் செல்வியைச் செவ்வே அலங்கரித்தனர்.

கவிராக்ஷஸ கச்சியப்பமுனிவர், தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், இராமநாதபுரம் சோமசுந்தர குரு முதலிய பல நன்மாணவர்களைத் தமிழ்நாட்டுக்கு உதவித் தமிழைப் பல திசைகளிலும் இசையுடன் வளர்த்தருளினர். 12-வது குருமகாசந்நிதானம் திருச் சிற்றம்பல தேசிகமூர்த்திகளும் இவர் மாணவர்களில் ஒருவரே. 13-வது வேளூர்-சுப்பிரமணிய தேசிகர், இவர் மாணவர் கச்சியப்ப முனிவரால் கற்றுவல்லுந ராதற்பொருட்டுப் பலகால் நன்கு தூண்டப்பட்டவர் என்பர். இவ்வாறு பல்லாற்றானும் செந்தமிழுலகம் செந்நெறியில் ஒழுக வழிகாட்டிப் பெரும்புகழ் பெற்றார் இவர். ஆதீன குலதெய்வமென அனைவரும் இவரை மனத்துக் கொண்டனர்.

இவர்கள் அருளிய திராவிடமாபாடியம், வட மொழியிலே சங்கரர் இராமாநுசர் மத்துவாசாரியர் நீலகண்டர் முதலியோர் செய்தருளிய பாஷ்யம் போலவே தமிழ்மொழியிலே பெருஞ்சிறப்புடன் விளங்குவதாம்.

நாடோறும் குருமகாசந்நிதானங்கள் வைத்திய நாதருடன் ஞானமா நடராச பூசைசெய்து முடித்துப்

Koviloor Digital Library

பின்பு ஆதீன முதற்குரவராகிய நமசிவாயமூர்த்தி களைப் பூசித்து வணங்கும்போது ஆதீன ஓதுவார் கள் பஞ்சாக்கரதேசிகர்மாலையை முறையே சொல்ல அது முடியும்வரையில் நமஸ்காரம் பண்ணிக்கொண் டிருந்து எழுந்து விபூதியருளுதல் இன்றும் வழக்கமா யிருந்து வருவது பிரத்தியட்சம். 'கயிலாயபரம்பரை' என்னும் குருமரபு தோத்திரச் செய்யுளையும் ஓதுவார் அப்பொழுது ஓதிமுடிக்கக் காணலாம். இதனால் சுவாமிகளுக்கு ஆதீனத்தில் இருந்துவந்த பெரு மதிப்பு வெளியாம். இவர்கள் திருவாவடுதுறையிலே (*1785*) விசுவாவசு-சித்திரை-ஆயிலிய நாளில் சிவபரி பூரண முற்றார்கள். அப்போது பிராயம் முப்பத்தி ரண்டு என்பர்.

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

Koviloor Digital Library

நூலாசிரியர் வரலாறு

ஸ்ரீ சிவஞானயோகிகள் இரட்டைமணிமாலையை இயற்றியவர் ஸ்ரீ பாண்டித்துரைசாமித்தேவர். இவர் தமிழ் வள்ளலான பொன்னுச்சாமித்தேவர் புதல்வர் மூவருள் மூன்றுமவர். பிள்ளைத் திருநாமமாக இவருக்கு இவர் தந்தையார் இட்ட பெயர் உக்கிரபாண்டியன் என்பது. இவர் 1867-ஆு மார்ச்சு-மீ 21௳ பிறந்தவர். நாடறிய இவருக்கு வழங்கிவந்த பெயர் பாண்டித்துரை என்பதே. தந்தையார் இறந்தபோது இவருக்கு வயது மூன்று.

பாண்டித் துரைசாமித்தேவருக்கு இளம் பருவத்திலே அழகர் ராஜு என்ற புலவரே தமிழறிவை ஊட்டிவந்த முதல் ஆசிரியர் ஆவார். ஆங்கில மொழியிலும் இவர் நல்ல பயிற்சியை அடைந்துவந்தார். 1884ல் தாம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றனர். பாலவனத்தம் என்ற ஜமீனும், வேறு பல கிராமபூமிகளும் இவருக்கு உரிமையாக உள்ளன. ஜமீன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றபின்பும் கலைப்பயிற்சியில் கருத்துடையவராகவே இருந்தார் பாண்டித்துரை. சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் என்ற புலவர் திலகரிடம் கம்பராமாயணம் முழுமையும் வரன்முறையே பொருள்கேட்டு முடித்தார். பின்பு தமிழ்ப் புலமையும் சைவ நூல்களில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்த மதுரை - இராமசாமிப்பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையிடம் காஞ்சிப்புராணம், தணிகைப்

Koviloor Digital Library

1743

புராணம் முதலிய நூல்களைக் கற்ருர். திருவாவடு துறை ஆதீனத்து ஸ்ரீ பழநிக் குமாரத்தம்பிரான் சுவாமிகளிடம் சைவசித்தாந்த சாத்திரங்களை நன்கு பயின்ருர். இந்த சாத்திரப் பயிற்சியால் பல சமயக் கொள்கைகளின் நுட்பங்களையெல்லாம் தேவர் நன்ருகத் தெரிந்துவல்லரானுர். கவித்துவ சத்தியும், இசையறிவும் இவருக்கு உண்டு. செந்தமிழ் நூல் களின் ஆராய்ச்சியிலும் தந்தையாரைப்போலவே நாடோறும் பொழுதுபோக்கி வந்தார். பிரசங்க வன்மை பெரிதும் படைத்திருந்தார் இவர். இராம நாதபுரத்தில் இவர் புதிதாகத் தமக்கென்று அமைத்த மாளிகைக்குச் "சோமசுந்தர விலாசம்" எனப் பெயர் இட்டார். திருவாலவாய்ச் சோமசுந்தரக் கடவுளிடம் உள்ள பத்திக்கு இது ஒரு எடுத்துக் காட்டாம்.

இனி, தேவரவர்களுடன் கல்வியில் இடைவிடாது பழகிவந்த புலவர்கள் பலருள் குறிப்பிடத்தக்கவர் கள் திருநாராயண ஐயங்கார், எட்டயபுரம் வீராசாமி ஐயங்கார், சுந்தரேசுவர ஐயர், அரங்கசாமி ஐயங்கார், சிவகாமியாண்டார் என்பவர்கள். மு. இராகவ ஐயங் காரவர்களும் இளம் பருவத்தில் இருபது ஆண்டுகள் தேவருடன் பழகி ஆதரவும் பெற்று விளங்கினர். பாண்டித்துரைத் தேவருடைய தமிழாசிரியர்கள் நால்வருள் அழகர் ராஜு, ஞானசம்பந்தப் பிள்ளை, பழநிக் குமாரத்தம்பிரான் சுவாமிகள் ஆகிய மூவரும் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணவர்கள் ஆக லின், திருவாவடுதுறை ஆதீனத்திலே இவர் பெரி தும் மதிப்பும் பக்தியும் ஈடுபாடும் உடையவராக

Koviloor Digital Library

இருந்துவந்தார். ஆதீன குலதெய்வமாகப் போற்றப் படும் ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள்பால் இவர் கொண்டுள்ள பக்தி அளவிடப்படுவதன்று. 'வட மொழிக் கடலும் தமிழ்மொழிக் கடலும் நிலைகண்டு உணர்ந்த மாதவச் சிவஞானயோகிகள்' திருவடிக் கண் வைத்த பத்தியும் ஈடுபாடுமே விசுவாவசு ஆண்டு சித்திரை ஆயிலியத்திலே (1905) இரட்டை மணிமாலையாக வெளிப்போந்து அணிவிக்கப் பெற்றது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் சொல்லும் பொருளும், பிற பல நலங்களும் நிரம்பியிருத்தலைக் கண்டு புகழ்ந்து வியவாதார் எவர்தாமுளர்!

இக்காலத்தும் தமிழ் நூற்பயிற்சி செய்வாரும், செய்துகைவந்தாரும் இம் முனிவர் பெருமான் திரு நாமம் கேட்கும்போதே சற்குரு விசுவாசம் உடையராய் மகிழ்தல் ஒருதலை.

இவர் தொகுத்து வெளியிட்ட நூல்கள் பன்னூற்றிரட்டு, சைவமஞ்சரி முதலியன. பலநூல்கள் இவர்கள் பேருதவியால் வெளிவந்தன. 1901-ஆம்-ஞு செப்டம்பர்-மீ 14-உ யன்று மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்களால் தாபிக்கப்பெற்றது. அது பிலவ-ஞு ஆவணி-மீ 13உ பானுவாரமும் சித்திரை நட்சத்திரமும் கூடிய நன்னுளிலே பகல் 1–30 மணிக்குமேல் 2-45 மணிக்குள் தனுர் லக்னத்தில் என்பர். அதன் சார்பிலே பணியாற்றிய பெரியோர்களில் என் தமிழாசிரியர் ஸ்ரீ ரா. புருஷோத்தமநாயுடு அவர்களின் ஆசிரியர் ஆகிய ஸ்ரீ திருநாராயண ஐயங்கார் சுவாமிகளும், மற்றொரு தமிழாசிரியர் திருவாவடுதுறை ஆதீன

Koviloor Digital Library

வித்துவான் ஸ்ரீ சு. பொன்னுதுவா மூர்த்திகளின் ஆசிரியர் திருவாவடுதுறை ஆதீனவித்துவானும் சைவநூற் பரிசோதகருமாகிய சேற்றூர் - ரா. சுப்பிர மணியக்கவிராயரவர்களும் இங்கே குறிப்பிடத்தக்க வர்கள். இவர்களில் திருநாராயணையங்கார் சுவாமிகள் ஸ்ரீ பழநிக்குமாரத் தம்பிரான் சுவாமிகளிடம் பாடங் கேட்ட நூல்கள் பலவாம். சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் இவ்வாதீனத்திலே உள்ள சின்ன சந்நிதானம் ஸ்ரீ நமசிவாயதேசிகர்பால் பல அரியநூல் களையும் நன்கு கற்றுத் தேறியவர். தமிழ்ச்சங்கக் கலாசாலை தொடங்கிய காலந்தொட்டு அதில் தலைமைத்தமிழாசிரியராக இருந்து நூற்றுக்கணக் கான மாணவருக்குத் தமிழறிவூட்டித் தமிழகத்தில் சிறப்புற விளங்கச்செய்த பெருமை திருநாராயணையங் காரவர்களுக்கே உரியதாம். செந்தமிழ்ப்பத்திரிகை யொன்றும் 1903ம் ஆண்டுமுதல் தொடர்ந்து சிறக்க வெளிவருவதாயிற்று. தேவரவர்கள் 1911-டிசம்பர்-மீ 2உ விண்ணுலகு அடைந்தனர். மிக விரிவாகவுள்ள தேவரவர்கள் சரித்திரத்தைப் பேராசிரியர் - ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' என்ற புத்தகத்திலே பார்க்க.

Koviloor Digital Library



ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்

சிவஞானசுவாமிகள் இரட்டைமணிமாலை

(பொழிப்புரையுடன்)

காப்பு

அணிமாலை வேணிகொள் ஈசனுக்
காட்பட் டரும்பிறவிப்
பிணிமாலை தீர்துறை சைச்சிவ
ஞானப் பிராற்கிரட்டை
மணிமாலை சூட்ட எளியேன்
மதிக்கு மகிழ்தருமால்
தணிமாலை யச்செல்வி நல்கோடை
யாம்பலந் தண்மலரே.

இ - ள்: அழகிய ஒழுங்குபட்ட கபர்த்தம் என்னும் சடையையுடைய சிவபெருமானுக்கு அடிமைத்திறம் செய்யும் சிவபுண்ணியப் பேற்றைச் சிறுபிராயத்திலேயே உம்மைப் புண்ணியமிகுதியால் இயல்பாகப் பெற்று, போக்குதற்கு அரிய பிறப்பு இறப்புக்கள் என்று சொல்லப்படும் நோயாகிய மயக்கத்தினின்று நீங்கிய, திருவாவடுதுறை என்னும் திவ்வியதலத்திலே சிவபரிபூரணப்பெருவாழ்விலே திளைத்திருக்கும் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் என்னும் திருநாமத்தையுடைய தம்பிரானது திருவடிகளிலே இரட்டைமணிமாலை என்னும் இந்த நூலைச் சிற்றறிவுடையேனாகிய அடியேன் சாத்துவதற்குப் புத்திக்கு மிகுந்த

Koviloor Digital Library

மகிழ்ச்சியைத் தந்து நன்கு நிறைவேறச் செய்தருளும்; குளிர்ந்த இமயமலையரசன் மகளாகிய பார்வதிதேவி யார் கருணையோடு பெற்றருளிய நெற்றிப்பட்டத்தை அணிந்த யானைமுகக்கடவுளது அழகிய குளிர்ந்த மலர்களாகிய திருவடிகள் என்றவாறு.

காத்தற் கடவுளின் விஷயமாகப் பாடப்படுவது காப்பு. இங்கு ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்தல் வேண்டி ஆசிரியர் விநாயகக்கடவுளை முதற்கண் வணங்குகின்றார். தம்மைவணங்கி வழிபடும் மெய்யடி யார்களுக்கு வரும் இடையூறுகளைப் போக்குதலும், வழிபடாத ஆன்மாக்களுக்கு இடையூறுகளை ஆக்குத லும் ஆகிய செயலைக் கொண்டிருத்தலின் சைவர்கள் யாவரும் எச்செயலை மேற்கொள்ளினும் முதலில் விநாயகமூர்த்தியை வணங்கி வழிபடுதல் இயல்பு.

வேணி - சடை. மாலை - ஒழுங்கு. இரட்டைமணி மாலை என்பது வெண்பாவும் கலித்துறையுமாக மாறி மாறிவர அந்தாதியாகச் செய்யப்படும் பிரபந்தம். தண் இமாலயச்செல்வி - குளிர்ந்த இமயமலையரசன் புதல்வியாராகிய பார்வதிதேவியார். ஓடை - நெற் றிப்பட்டம். ஆம்பல் - யானை. ஓடை, ஆம்பல், மதி சொல்நயம் அறியற்பாலது. தண் மலர் மகிழ்தரும் என முடிக்க.

நூல்

பொன்னுலகும்பாரும்பொருந்துறினும்போகினுமற்று
என்னுறினும்புன்சமயம்எய்துவரோ-நன்னெறியோர்
தேடுசிவ ஞானமுனி செப்புபுனி தாத்துவிதம்
நாடியுணர் மேலோர் நயந்து.

Koviloor Digital Library

இ - ள்: தேவருலகமும் நிலவுலகமும் வந்து பொருந்துவதாயினும், அன்றி அவை போவதாயினும், மற்றும் என்ன துன்பம் வந்தடைவதாயினும் கீழாகிய சமயமார்க்கங்களிலே வீட்டு நெறியை அடைய வேணவாக் கொண்ட பெரியோர் சென்று சேர்வாரோ? சேரார்; வீட்டு நெறியை அடைதற்குரிய சிவபுண்ணிய சீலர்களால் நாடப்படுகின்ற சிவஞான முனிவர்பிரான் ஐயம் திரிபுகளின்றித் தமது மாபாடியத்திலே நன்ருக விளக்கிச் சொல்லியருளிய சுத்தாத்துவிதமாகிய சித்தாந்த சைவ நெறியை அநுபவமுடைத் தேசிகர் வாயிலாக அறிந்து தமது மெய்யறிவின்கண்ணே வைத்து உணரும் மேலோர் விரும்பி என்றவாறு.

நயந்து எய்துவரோ என முடிக்க. பார் - பூமி. நன்னெறி - சன்மார்க்கம். புனிதாத்துவிதம் - சுத்தாத்துவிதம். அத்துவிதம் என்பதிலுள்ள நகரம் அன்மைப்பொருளைத்தரும் என்பதும், சுத்தம் என்பது 'சுத்தசத்தை' என்னும் வழக்குப் போன்றது என்பதும் சிவஞானமாபாடியத்தில் கூறப்பட்டன. அத்துவிதவாக்கியத்தெளிவுரை என்னும் நூலானும் அறியலாம். அன்மைப்பொருள் தற்சாதிருசியத்தில் அடங்குதலின், இப்பொருள் மாபாடியத்துக் கூறப்பட்டதே என்க. நயந்து-விரும்பி. திருவியலூர் உய்ய வந்த தேவநாயனுர்,

"சாவிபோம் மற்றச் சமயங்கள் புக்குநின்று
ஆவி யருதேஎன் றுந்தீபற
அவ்வுரை கேளாதே யுந்தீபற"

என்றருளியதும் காண்க. (1)

Koviloor Digital Library

நயனறி யாதபுன் செல்வர்தம்
வாயிலில் நாடொறும்போய்ப்
பயனறி யாதரும் பாவிசைப்
பீர்வட பாற்புலிசை
இயனிறை வேதியற் கன்றிரும்
பொற்கிழி யேற்றுமணஞ்
செயநெறி யாளுத வும்பெரி
யோன்புகழ் தேருமினே.

இ-ள்: *நன்மை என்பதனை இன்னதென்றறி யாத அற்பராகிய செல்வர்களுடைய வாயில்களிலே நாடோறும் சென்று சென்று, மக்களுடம்பை எடுத் துக் கற்ற கல்வியின் பெரும்பயனையறியாமல் அருமை யான பாட்டுக்களைச் சொல்லி இரந்துதிரியும் புலவர் களே! திருப்பாதிரிப்புலியூரின்கண் இயற்றமிழிலே வல்ல ஓர் அந்தணனுக்கு அக்காலத்திலே மிக்க பொன் நிறைந்த முடிப்பைப் பெற்று மணம் செய்து கொள்ளுமாறு சபையார் விருப்பின்படி முறையாக உதவி செய்தருளிய அருட்பெரியோனாகிய ஸ்ரீ மாத வச் சிவஞானயோகிகளது புகழை நன்ருகத் தெளிந்து அறிவீராக என்றவாறு.*

நயன் - நன்மை. அரும் பா - அருமையானபாட்டு.

"பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்"

என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரப்பகுதியை முதல் இரண்டு அடிகள் நினைப்பிக்கின்றது. மற்றும்,

"நோக்கம் அருக்கும் விழிச்செல்வர் பாற்கவி நூறுரைத்துத்
தாக்கம ருக்கு முருகா அருளென்பர் தண்செருந்தி
பூக்கம ருக்குல வும்புக லூரரைப் போற்றியுய்யார்
பாக்கம ருக்குத் தென்கொல்சொல் வாணர் பரிவிதுவே"

Koviloor Digital Library

என்னும் திருப்புகலூரந்தாதிச்செய்யுளானும் இதனை உணர்க. வடபாற் புலிசை - திருப்பாதிரிப்புலியூர். சுவாமிகள் 'வரை யேற விட்டமுதம்' என்னும் செய்யுள் பாடிப் பிராமணனுக்குப் பொற்கிழி உதவிய வரலாறு இதில் கூறப்பட்டது. (2)

தேரினறி விற்சிறந்தநர் செப்புசிவ ஞானமுனி
சோர்வில் இளமைத் துறவறிந்தும் — பாருலகிற்
கொன்று தரித்துழலுங் கோதுடையேன் நெஞ்சினை
எந்நாள் அகலும் இருள். *[விட்(டு)*

இ - ள்: ஆராயுமிடத்து அறிவுடைப் பெருமக்கள் யாவரானும் துதிக்கப்படும் சிவஞான சுவாமிகள் சோர்தல் இல்லாத இளமைப் பருவத்திலேயே அடைந்த துறவைக் கேட்டறிந்தும் இந்த நிலவுலகிலே பயனில்லாத காரியங்களையே விரும்பிச் செய்து திரிதரும் குற்றத்தையே கொள்கலமாக உடையவனாகிய அடியேனுடைய மனத்தைவிட்டு எப்பொழுது அறியாமையாகிய இருள் நீங்குதலைச் செய்யும் என்றவாறு.

சோர்வு இல் இளமை, சோர்வு இல் துறவு எனப் பிரித்துக்கூட்டுக. சோர்வு இல் துறவு என்பது 'நடையறுப்பெருந்துறவு' என்றபடி: இதனை,

> " அறந்தா னியற்றும் அவனிலும் கோடி அதிகமில்லம்
> துறந்தா னவனிற் சதகோடி உள்ளத் துறவுடையோன்
> மறந்தான் அறக்கற்று அறிவோ டிருந்து இருவாதனையற்று
> இறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி யேகம்பனே "

எனத்திருவேகம்பமாலையில் பட்டினத்தடிகள்அருளிச் செய்தவாற்றானும் அறிக. பயனில்லாத காரியங்களாவன உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்

Koviloor Digital Library

நுகர்ந்ததே நுகர்ந்தும் திரிதல்: ஆன்மலாபமாகிய சிவப்பேற்றைச் சிந்தியாமல் வயிற்றை ஓம்புதற் பொருட்டுச் சோற்றுப்பாட்டுக்கே திரிதரல் என்றபடி.

கொன் - பயனின்மை. இருள் - அறியாமை. (3)

இருட்டலை நேர்கரு மென்குழல்
மாதர் இணைவிழியால்
மருட்டலை நீத்தெளி யேனுய்யு
மாறு வகுத்தபிரான்
தெருட்டலை சேருஞ் சிவஞான
பாடியந் தேர்ந்தவர்க்கே
சுருட்டலை வாய்ப்புன் றுரும்பொத்த
சிந்தைத் துரிசறுமே.

இ - ள்: இருட்டாகிய அல்லையொத்த கரிய மென்மையான கூந்தலழகினையுடைய பெண்கள் இரு விழிகளாலும் மயக்க மயங்கும் செயலின்நீங்கி எளியேனும் உய்யுமாறு வழியினை வகுத்தருளிய பரமோபகாரியாகிய சிவஞான முனிவரது தெளிவு பொருந்திய சிவஞானமாபாடியத்தைக் கற்றறிந்த பெரியோர்களுக்கே, காற்றால் சுருட்டப்படும் அலையினிடத்து அகப்பட்ட சிறிய துரும்பினையொத்த மனத்தின்கண் உள்ள குற்றமாகிய அறியாமை நீங்கும் என்றவாறு.

இருட்டு அல் - இருட்டாகிய அல். மருட்டல் - மயக்குதல். தெருள்தலைசேரும் - தெளிவுபொருந்திய. சுருட்டு அலை - காற்றாற்சுருட்டப்படும் அலை. துரிசு - குற்றம். (4)

Koviloor Digital Library

மேயகலை நாதாங்கும் வெண்பூதி மெய்தாங்கும்
பாயகரம் ஈசன் பணிதாங்குந் — தோய்கருணை
வெள்ளமிரு கண்தாங்க மேவுசிவ ஞானமுனிக்(கு)
உள்ளம் பொறைதாங் குறும்.

இ - ள்: பொருந்திய கலைஞானங்கள் எல்லாம் நாவினிடமாக நின்று நடிக்கும்; திருவெண்ணீறு சண்ணித்த பேரொளியைத் திருமேனி தாங்கிநிற்கும்; பரந்த இரண்டு திருக்கரங்களும் சிவபெருமானுடைய திருத்தொண்டிலே நிலைபெற்றிருக்கும்; அடியார்கள் நெருங்கி முழுகுதற்குரிய கருணைப் பெருக்கத்தை இரண்டு திருக்கண்களும் பொருந்தப் பெற்றுள்ளன வாம்; அத்தகைய பெருமையினையுடைய மாதவச் சிவஞான யோகிகளுக்குத் திருவுள்ளமானது பொறு மையினையே தாங்கிநிற்கும் என்றவாறு.

இது. திருமேனியைத் தியானம்செய்யும்முறை கூறும்.

கலை - நூல்: கலைஞானங்கள். பூதி - விபூதி. பாய - பரந்த. பொறை - பொறுமை. ''பொறை யுளத்திற் பொறுத்தே'' என்பது சுப்பிரமணிய முனிவர் திருவாக்கு. (5)

குறுமா முனிவன் தருவரத்
தாலிக் குவலயஞ்சீர்
பெறுவா னுதித்த சிவஞான
தேவரின் பேரருளிச்
சிறுநாயி னேன்பவ வாரியிற்
பாயிற் றிறந்திடுங்கோ
தறுவா னதியும் உவராழி
பாய்ந்திசைத் தாயதுவே.

Koviloor Digital Library

இ - ள் : குறுகிய வடிவத்தையுடைய மகத்துவ மிக்க அகத்திய முனிவரது வரத்தினுல் இந்நில வுலகம் சித்தாந்த சைவமுத்தி நிலையைத் தெளிந்து சிறப்பை அடையும்பொருட்டு அவதரித்தருளிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளின் பெருங்கருணை யானது ஒன்றுக்கும் பற்ருதவனுகிய இந்தச் சிறிய நாயினது தன்மையையுடைய அடியேன் பிறவிக் கடலிடைப் பெருகின் அந்த மடையுடைந்து முத்தி யங்கரையை அடைதற்கு ஏதுவாம்; குற்றமற்ற கங்கா நதியும் உவர்நீர் மிக்க கடலினிடத்துப் பாய்ந்து கீர்த்தியினையே உடையதாயிற்று என்றவாறு.

குவலயம் - பூமி. பவவாரி - பிறவிக்கடல். கோது அறு வான் நதி - குற்றமற்ற கங்காநதி. உவர் ஆழி - உப்புக்கடல். இசைத்து - கீர்த்தியினையுடையது; குறிப்பு வினைமுற்று. கக்கித் தின்னும் நாய்போல அடியேனும் அநுபவித்ததையே அநுபவித்து அரு வருப்பின்றி வாழ்கின்றேன், உலகவாழ்வை உவர்க் கின்றிலேன் என இழிவுகுறித்து நாயினேன் என்ருர். எடுத்துக்காட்டுவமையணி. (6)

ஆயசம யம்பலவும் ஆரியமா பாடியமே
மேயவென நற்சைவ மேன்மையுறத் — தூயதமிழ்ப்
பாடியமும் பாரிற் பகர்ந்தான் பரனடியே
நாடுசிவ ஞானமுனி நன்கு.

இ - ள் : அவரவர் அறிவுக்குத் தக்கபடி பொருந் திய பல சமயங்களும் வடமொழியிலேயுள்ள பாஷ்யங் களையே கொண்டுள்ளன எனச்சொல்ல, சிறந்த சித்தாந்த சைவ சமயமானது மிகவும் மேம்பாடுற்று

Koviloor Digital Library

விளங்குமாறு சிறந்த செந்தமிழ்மொழியிலும் உலகத்திலே பாடியம் நன்கு நிலைபெறுமாறு செய்தருளினார்கள்; சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமிக்க ஸ்ரீ மாதவச் சிவஞானமுனிவர் என்னும் சிவயோகிகள் என்றவாறு.

ஆய சமயம் பலவும் - பலவும் ஆகிய சமயம் என்க; பலசமயங்களும். இங்கே சமயங்கள் என்பன ஏகான்மவாதம், விசிஷ்டாத்துவைதம் முதலியன. அவற்றிற்குரிய பாஷ்யங்கள் வடமொழியில் சங்கரர், இராமாநுசர், நீலகண்டர் முதலியோரால் செய்யப்பட்டு உள்ளன. சைவசித்தாந்தத்திற்கோ வடமொழியில் சிவாக்கிரபாஷ்யம் இருப்பதன்றித் தமிழில் சிவஞானமாபாடியமும் உளதாயிற்று என்க. (7)

நற்பாலர் வேண்டின் மயிலம்மை
யார்தவ நாடுகநூல்
கற்பா னசையிற் சிவஞான
தேவன் கலையுணர்க
சொற்பா லறத்துற வுன்னிலன்
னுனிற் றுறக்கவிப்பா
ரிற்போகம் வேட்கிற் சிவபோக
மேவிரைந் தெய்துகவே.

இ - ள்: நற்புதல்வரை விரும்பினோர் மயிலம்மையார் தவத்தைத் தெரிக. நூல்களைக் கற்கவிரும்பினால் ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த நூல்களையும் மாபாடியத்தையும் நல்லாசிரியரை யடுத்துக் கற்று உணர்க. புகழ்ச்சியின் பகுதியும் நீங்கத் துறவறத்தை மேற்கொண்டு ஒழுக விரும்பினால் அம்முனிவர்பிரானைப்போலத் துறவினை மேற்கொள்ளுக.

Koviloor Digital Library

இப்பூமியிலே போக நுகர்ச்சியைப் பெறவிரும்பினல் சிவபோகப் பெருவாழ்வையே விரைவிலே துய்க்கக் கடவர் என்றவாறு.

பாலர் - குமாரர்கள். கற்பான் - கற்க; பானீற்று வினையெச்சம். நசையின் - விரும்பினுல். சொல்பால் அற - புகழ்ச்சியின் பகுதியும் நீங்க. 'புகழினை விரும் பலும் போதத்துன்பமே' என்பது சுவாமிகளின் திரு வாக்கு. பார் - பூமி. வேட்கின் - விரும்பினுல். (8)

எய்துமுயி ராங்கரியை யீர்த்தாசை வன்கரவம்
வெய்யபவ வாரிதியுள் வீழ்த்தாமே — பொய்தீர்
தெருளாய் சிவஞான தேசிகா நின்பேர்
அருளாழி யுய்த்தெனைவந் தாள்.

இ - ள்: சிற்றறிவும் சிறுதொழிலும் பொருந் திய ஆன்மாவாகிய யானையை ஆசையாகிய வலிய முதலை இழுத்துச்சென்று பிறவிக் கடலினுள்ளே அழுத்திவிடாமல் 'பொய்கண்டார் காணுப் புனித மெனும் அத்துவித மெய்கண்ட' ஞானத்தை ஆராய யும் சிவஞானமே வடிவாக எழுந்தருளிய ஆசாரிய மூர்த்தியே! தேவரீருடைய பெரிய திருவருளாகிய சக்கராயுதத்தைச் செலுத்தி ஒன்றுக்கும் பற்றுத அடியேனையும் வந்து ஆட்கொண்டு அருளுவீராக என்றவாறு.

கரி - யானை. கரவம்-முதலை. பவ வாரிதி - பிறவிக் கடல். தெருள் ஆய் - ஞானத்தை ஆராயும். அருள் ஆழி - திருவருளாகிய சக்கராயுதம். வன் கரா, பவ வாரிதி, அருள் ஆழி இவற்றின் நயம் கஜேந்திரன் வரலாற்றில் வைத்து அறியற்பாலது. முற்றுருவகம்.

Koviloor Digital Library

தேசிகர் என்பது பீடத்தில் எழுந்தருளியுள்ள ஞாஞசாரியர்களுக்கே உரியதாயினும், இங்கே அடியார் கூட்டத்தில் ஒருவராக எழுந்தருளிய தம்பிரான் சுவாமிகள் இவர்கள் எனத் தெரிந்துவைத்தும் 'சிவ ஞானதேசிகர்' என்றது இவர்களுக்குள்ள சிவஞானப் பெருமை நோக்கியே என்க. இனி, ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் மாணவர்களுட் சிறந்த கவிராக்ஷஸ - ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் ஆதீன பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளைத் தோத்திரம் செய்யும்போது தமது வித்தியாகுருவாகிய சிவஞானசுவாமிகளும் அப்பெருமானே என்று தோத்திரம் செய்தருளினர்கள்.

"தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசிநின் ருடிய அம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசிநின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே"

என்பது பஞ்சாக்கரதேசிகரந்தாதிச் செய்யுள். (9)

ஆளாய் மறைசையுள் வாகீசர்
மேவ அரன்தளிசேர்
தாளார் கதவந் திறந்ததென்
பார்துறை சைப்பதிவாய்
வேளா மெனச்சொல் சிவஞான
தேசிகன் மேவியபின்
மாளாத மாயக் கதவற்ற
தாலென் மனத்தளிக்கே.

இ - ள்: சிவனடியாராகத் திருமறைக்காடு என்னும் தலத்தைத் தரிசிக்கும் பொருட்டுத் திருநாவுக்கரசுநாயனுர் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுடன்

Koviloor Digital Library

சென்ற காலத்து வேதங்களால் பூசிக்கப்பட்டுத் திருக்காப்புச் செய்துள்ள சிவாலயம் தாட்பாள் கோக்கப்பட்டிருந்த கதவுகள் திறக்கப்பட்டன என்று பெரியோர் கூறுவர். திருவாவடுதுறையாகிய தலத்தின்கண் முருகவேள் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் மாதவச் சிவஞான சுவாமிகள் எழுந்தருளிய பின்பு, கெடாத மாயத்தன்மையுள்ள ஆணவமாகிய கதவு என்மனமாகிய கோயிலினின்று நீங்கினது என்றவாறு.

ஆள் - அடியார். மறைசை - திருமறைக்காடு. வாகீசர் - திருநாவுக்கரசுநாயனார். அரன்தளி - சிவாலயம். தாள் - தாட்பாள். ஆர் - பொருந்திய. வேள் ஈண்டுச் செவ்வேள் ஆகிய முருகவேள்: ஞானத்தால் வேள் என்றது. மாளாத மாயக்கதவு - கெடாத மாயத்தன்மையுள்ள ஆணவமாகிய கதவு. மனத்தளி- உளக்கோயில். திறந்தது அற்றது என்றதன் நயம் உணர்க, (10)

கேளாரும் வேட்குமொழி கேடில்சிவ ஞானஅருள்
ஆளாநின் வாயதெனி லார்விழையார் - சூளுரைவேட்
டண்ணு மலையண்ண லண்ணல்வியப் பேபருக
எண்ணுரார் வானமுதொன் றின்.

இ - ள்: பகையாய் ஒன்றினை ஏற்றுக்கொள்ளாரும் (பகைமை ஒழிந்து நட்பினை) விரும்பும் மொழியானது சிவஞானம் என்னும் திருநாமத்தையுடைய பேரருளாளனே! தேவரீருடைய வாயின்கண் உள்ளது என்றால் யாவர்தாம் அதனை விரும்பமாட்டார்; மெய்யுரையை விரும்பித் திருவண்ணமலை ஆதீனத்தைச் சேர்ந்த

Koviloor Digital Library

ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவருடைய வழித்தோன்றலாயினர் அடைதல் வியப்பாமோ? தேவாமிர்தம் வந்து கிடைப்பதாயின் அதனை உண்ண நினையாதவர் நிலவுலகத்திலே யாவருளர் என்றவாறு.

கேளார் - (பகையாய்) ஏற்றுக் கொள்ளாதார். வேட்கும் - (பகைமை ஒழிந்து நட்பினை) விரும்பும். மொழி வாயது என்க. விழையார் - விரும்பார். சூளுரை - ஈண்டு மெய்யுரை. அண்ணுமலை அண்ணல் - திருவண்ணுமலை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர். இவர் தமது சிவசமவாத மதம் பற்றி நூல்செய்ததன்றியும் சித்தாந்த சாத்திரங்களில் வடமொழிச் சிவஞானபோத சூத்திரங்களுக்குத் தமது மதச்சார்பாக ஓர் விருத்தியுரையும், சிவஞான சித்தியாருக்கு ஓர் புத்துரையும் வகுத்தார். அவ்வுரைகள் சிவாகம விரோதமாகலின் ஸ்ரீ பாஷ்யகாரர் அவற்றை மறுத்தருளினர். சுவாமிகள் செய்தருளியது சிவசமவாதவுரை மறுப்பு என்பது. அண்ணல் - அடைதல். வியப்பே - ஆச்சரியமோ. வான் அமுது - தேவாமிர்தம். எடுத்துக்காட்டுவமையணி.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

எனத் திருவள்ளுவர் கூறியருளினமையும் காண்க.

"ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராகரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியில் அற்புதத்
தொருவடிவு கொண்டருளியே
பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகையாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேருவாகி

Koviloor Digital Library

ஆதரித் தடியேங்கள் உண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமாகியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதைமாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நிதியிலோர்
மணிவிளக் கெனவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்குவாமே."

எனத் தொட்டிக்கலை மதுரகவி சுப்பிரமணியமுனிவர் துதித்தருளியமை சிந்திக்கத்தக்கது. (11)

ஒன்னார்த் தெறல்செய் துவந்தார்க்
கருள்தவம் உன்கண்ணதே
என்னு மொழிவர் சிவஞான
தேவ விசைந்தசைவ
மன்னு வலன்செ யிலக்கணஞ்
சூரு வளியுறுத்தி
யுன்னுப் பவணந்தி நூலினி
தாக்கலென் ஓர்கிலனே.

இ - ள் : பகைவரது பகைமைகெட அழித்தலும் தம்மை வழிபாடு செய்து அணுகும் அடியார்களை உயர்த்தலும் ஆகிய செயல்களுக்குரிய தவம் தேவரீரிடத்து இயல்பிலே பெருகவுளதாம் எனப் பெரியோர் கூறுவர். சிவஞானதேவரே! சைவ சமயத்திலே பொருந்திய சிறந்த திருவாரூர் வைத்தியநாதநாவலர் செய்த இலக்கண விளக்கம் என்னும் நூலைச் 'சூறாவளி' என்னும் நூலால் மறுத்தருளி, சைவ சமயமே மெய்ச்சமயம் என்று எண்ணாத பவணந்தி முனிவரால் செய்யப்பட்ட நன்னூல் என்னும் இலக்கண நூலை இனிமையையுடையதாகச் செய்தருளியது

Koviloor Digital Library

எக்காரணம் பற்றியதாம்? அதனை யான் அறிகின்றிலேன் என்றவாறு.

சுவாமிகள் மாதவர் ஆகலின், தவம் உன் கண்ணதே என்றார்.

" ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தான் வரும் "

என்பது திருக்குறள். 'முற்றத்துறந்தார்க்கு ஒன்னாரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற் கேற்றி உரைக்கப்பட்டது' எனவரும் பரிமேலழகர் உரை அறிந்து இன்புறற்பாலது. அக்கருத்துப்பற்றி ஈண்டு 'அருள்தவம்' என்றார். நாவலன் - திருவாரூர் வைத்தியநாத நாவலர். அவர் இயற்றிய இலக்கணம் - இலக்கண விளக்கம். அவரியற்றிய நூல் உரைகளில் பிழைகள் மலிந்திருந்தமையின் சுவாமிகள் 'இலக்கண விளக்கச்சூறாவளி' இயற்றியருளி மறுத்தனர். உன்னு - சைவசமயமே மெய்ச்சமயம் என்று எண்ணுத. பவணந்திநூல் - நன்னூல் என்னும் இலக்கணம். இனிது ஆக்கல் என்றது நன்னூலுக்குத் திருநெல்வேலிச் சங்கர நமச்சிவாயப்புலவர் இயற்றிய உரையைத் திருத்தி விருத்தியாக்கியது. (12)

ஓராழி யுண்டமுனி யுட்கவட சொற்கடலுஞ்
சீரார் தமிழ்க்கடலுஞ் சேரவுண்டு — பாருலகில்
தீங்கவியா மாவுறையாற் செய்யசிவ ஞானமுகில்
ஈங்கவியா நீக்கும் இடர்.

இ - ள்: ஒரு சமுத்திரத்தை உழுந்தமிழ்ந்து நீராகச்செய்து குடித்தருளிய அகத்திய முனிவரும் வெள்கும்படி சிறந்த தமிழ்மொழிக் கடலேயன்றி வடமொழிக் கடலும் ஒருசேரக் குடித்து அதனை

Koviloor Digital Library

நிலவுலகத்திலே இனிய பாக்களாகிய பெரிய மழையால் செவ்விய சிவஞானமுனிவரர் என்னும் மேகமானது இவ்விடத்துத் துன்பமாகிய வெப்பத்தைக் கெடுத்து ஒழிக்கும் என்றவாறு.

ஓர் ஆழி உண்ட முனி - அகத்திய முனிவர். உட்க - வெள்க. சேர - ஒருசேர. தீங்கவி - இனிய பாக்கள். மா உறை - பெரிய மழை. இடரை அவியா நீக்கும் - துன்பமாகிய வெப்பத்தைக் கெடுத்து ஒழிக்கும். 'முனிக்கரசுகையால்..பனிக்கடலும் உண்ணப் படும்' என்றதும் காண்க. ஏகதேசவுருவகம். (13)

இடரார் பிணியெனப் பன்மதப்
பேய்கள்வந் தென்னறிவைத்
தொடரா மயக்கினும் யான்மரு
ளேன்பணை சூழ்துறைசைத்
திடனுர் மனத்துச் சிவஞான
தேசிகன் தேர்ந்துலகில்
அடலார் தரப்புகல் சித்தாந்த
நூலென் அகத்ததுவே.

இ - ள்: துன்பம் மிக்க நோய்கள் எனலாம்படி பலவகைப்பட்ட மதங்களாகிய பேய்கள் வலிந்துபற்றி என்னுடைய அறிவைத் தொடர்ந்து மயக்கத்தைச் செய்வன ஆயினும் யான் மயங்கமாட்டேன்; வயல்கள் சூழ்ந்த திருவாவடுதுறையினிடத்துத் திடமாகிய மனத்திணையுடைய சிவஞானமாமுனிவர் ஆராய்ந்து உலகத்திலே வெற்றி பொருந்துமாறு திருவாய் மலர்ந்தருளிய சிவஞான மாபாடியம் என் மனத்தின் கண் நிலைபெற்றுள்ளது ஆகலான் என்றவாறு.

Koviloor Digital Library

இடர் - துன்பம். பிணி - நோய். தொடரா - தொடர்ந்து. மருளேன் - மயங்கேன். பணை - வயல், அரசு எனினுமாம். திடன் போலி. அடல் ஆர்தர - வெற்றி பொருந்துமாறு. சித்தாந்த நூல் ஈண்டுச் சிவஞானபாடியம். அகத்தது - மனத்திலுள்ளது.(14)

அகமடங்கும் ஆசை யகற்றறியார் தம்பாற்
சகமடங்க எண்ணிச் சலிப்பர் — மிகமடங்கொள்
பொய்யறிவி னூர்பாற் புகுதா தெனையாண்டான்
மையில்சிவ ஞானமுனி வன்.

இ-ள்: மனத்திலே பொருந்திய ஆசையை நீக்கத் தெரியாதவர்கள், தம்மிடத்திலே உலகம்முழுவதும் அடங்குமாறு எண்ணிச் சலிப்பை அடைவார்கள். மிகுதியும் மடமையையுடைய பொய்ம்மையாகிய அறிவினையுடையாரிடத்துச் சென்று கெடாமல் குற்றமில்லாத சிவஞானமாதவன் என்னையும் ஆட்கொண்டருளினன் என்றவாறு.

அகம் அடங்கும் ஆசை - மனத்திலே பொருந்திய ஆசை. அகற்ற அறியார் - நீக்கத் தெரியாதவர்கள்: அகரவீறு தொகுத்தல். அறியார் வினையாலணையும் பெயர். சகம் - உலகம். மடம் - மடமை. மை - குற்றம். (15)

வன்னின்ற கொங்கை யுமையொரு
பாகனை வாழ்த்துகைக்கே
சொன்னின்ற நாவணங் கச்சிர
மாலயஞ் சூழ்வரத்தாள்

Koviloor Digital Library

பொன்னின்ற மெய்யெழில் காணுகைக்
கேகண் பொருந்துமென
முன்னின் றுணர்த்துங் குருசிவ
ஞான முனிக்கரசே.

இ - ள் : சூதாடு கருவியை ஒத்த தனபாரங்களை யுடைய உமாதேவியாரைத் தமது வாமபாகத்திலே கொண்டு விளங்கும் சிவபெருமானை வாழ்த்துதற் பொருட்டு நாவும், திருவடிகளை வணங்குதற்குச் சிரமும், அவன் ஆலயம் வலஞ்செய்தற் பொருட்டுக் கால்களும், பொன்போலும் திருமேனியின் அழகைக் காணும்பொருட்டாகவே கண்களும் பொருந்தும் என எதிரே எழுந்தருளி உணர்த்தும் குருமூர்த்திகள் சிவஞானசுவாமிகளாகிய முனிவர்பிரானே ஆவார்கள் என்றவாறு.

வல் - சூதாடுகருவி. நின்ற உவமவாசகம். வாழ்த்து கைக்கு நா, வணங்கத் தலை, சூழத் தாள், காணக் கண் பொருந்தும். ''துதிப்பதற்கு வாயமைத்தாய் சூழ்வதற்குத் தாளமைத்தாய், மதிப்பதற்கு மன மமைத்தாய் வணங்குதற்குத் தலையமைத்தாய்'' என்பது சுவாமிகள் திருவாக்கு. திருநாவுக்கரசு சுவாமி களும்,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

என்று அருளிச்செய்துள்ளமை காண்க. திருவள்ளுவ நாயனுரும்,

Koviloor Digital Library

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்றருளினர். (16)

அரவிடமா வாழ்சடையா ராய்ந்தளித்த நூற்குத்
திரவிடமா பாடியமுன் செய்தோன் — பரவுலகிற்
குற்றங் களைபுநன்கு கூறியநூல் கொண்டுய்யா
மற்றங் களையுலக்கு வார்.

இ - ள்: பாம்புகள் தாம் வாழ்வதற்குரிய இடமாகக்கொண்டு தங்கும் சடையினையுடைய சிவபெருமான் திருநந்திதேவருக்கு அருளிச்செய்த சிவஞானபோத நூலுக்குத் திராவிடமாபாடியம் முன்னர் அருளிச்செய்த மாதவச் சிவஞானயோகிகள், பரந்த உலகத்திலே குற்றங்களைநீக்கி மரபை நன்கு உணர்த்திய கண்டன நூல்களைக் கற்றறிந்து தம்முடைய அறியாமையை நீக்கிப் பிழைக்காமல் தம்மைத்தாமே கெடுப்பார் பலர் என்னே! என்றவாறு.

அரவு - பாம்பு: அரா அர எனக் குறுகியது எனலுமாம்; விகாரம். நூல் - ஈண்டுச் சிவஞானபோதம். வடமொழியிலே பாணினி சூத்திரம் வரருசி வார்த்திகமும், பதஞ்சலி மாபாடியமும் இருத்தல் போலத் தமிழில், ஸ்ரீகண்டமுதல்வர் அருளிச்செய்த சிவஞானபோதமும், மெய்கண்டதேவநாயனர் அருளிச்செய்த வார்த்திகமும், சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த சிவஞானபாடியமும் இருக்கின்றன என்னும் கருத்தால் 'சிவஞானபாடியம்' திராவிடமாபாடியம் எனப்பட்டது.

பரவு உலகு - பரந்த உலகம். களைபு - நீக்கி. உய்யாமல் - பிழைக்காமல். தங்களை உலக்குவார் - தம்மைத்தாமே கெடுப்பார். பலர் என ஒருசொல்

Koviloor Digital Library

வருவித்து முடிக்க. இனி, உய்யாமல் எனக்கொண்டு முடித்தலுமாம். அம்முடிபுக்கு ஏற்ப உய்யா செறலின்வந்த திணைவழுவமைதியாகவும், மன்னைச்சொல் மிகுதிப்பொருளின் வந்ததாகவும் கொள்க.

இது, சுவாமிகள் அருளிச்செய்த கண்டனநூல்களின் சிறப்புக் கூறியவாறு. (17)

வாரிக் குமாரனைக் காய்சிவ
ஞான வரோதயபூ
வாரிக் குமார இறும்பூ
துறுத்துநின் வாய்மொழிதேர்
வாரிக் குமாரதங் கோடல்செய்
யார்மன் மதிப்பர்கொலோ
வாரிக் குமார விலங்கற்கு
நந்தல்செய் வானையுமே.

இ - ள்: வார் இகு - பெரிய இந்தப் பூமியில், மாரனை காய் - மன்மதனைக் கோபித்தருளும், சிவஞான வரோதய - மேம்பட்ட சிவஞான சூரியனே, பூ வாரிக்கும் ஆர இறும்பூது உறுத்தும் - வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் நாமகளுக்கும் நிரம்ப ஆச்சரியத்தை விளைவிக்கும், நின் வாய்மொழி தேர்வார் - தேவரீரது திருவாய்மொழியாகவுள்ள நூல்களையும் உரைகளையும் ஆராய்ந்துணரும் மதுகையினைப் புண்ணியவசத்தால் பெற்றோர், இக்கு மாரதம்கோடல் செய்யார் - கரும்பின்சிறந்த சாற்றையும் உட்கொள்ளார், வாரிக்கும் ஆர விலங்கற்கும் நந்தல் செய்வானையும் - சமுத்திரத்திற்கும் சந்தனமரங்கள் வளரும் விந்தமலைக்கும் கேட்டினைச் செய்தவராகிய அகத்திய முனிவரையும், மன் மதிப்பர் கொலோ - பெரிதும் மதிப்பார்களோ என்றவாறு.

Koviloor Digital Library

வார் - பெரிய. கு - பூமி. மாரன் - மன்மதன். வர உதயன் - மேலான சூரியன். பூ - தாமரைமலர். வாரி - நாயகள். ஆர - நிரம்ப. இக்கு - கரும்பு. ரதம்- இரதம்; சாறு. வாரி - கடல். ஆரம் - சந்தனம். விலங்கல் - மலை. நந்தல் - ஆக்கம் கெடல்.

சுவாமிகள் நடையரும் பெருந்துறவினையுடையார் ஆதலின் 'மாரனைக்காய் வரோதய' என்றார்: 'பெருமைதரு துறவோடு பொறையுளத்திற் பொறுத்தே' என்று அருளினர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர். அகத்திய முனிவர் கடல்நீரைக் கையில் எடுத்து ஆசமனம் செய்தருளினமையும் விந்தமலையின் செருக்கை அடக்கினமையும் கந்தபுராணத்தால் அறிக. ''அலைகடலும் சேணிகந்த பெருவரையும் திறத்திற் குன்றக் கரந்துளக்கும் குறுமுனி'' என்றருளினர் விநாயகபுராணத்தின் பாயிரத்திலே கவிராட்சஸ - ஸ்ரீ கச்சியப்பமுனிவர். (18)

நைவொழியும் ஈசனுயிர் நாடியவற் கூடுமிடை
மைவருவெம் பாச மறைப்பதெனு — வுய்வழியுந்
தேற்றுஞ் சிவஞான தேவவெளி யேனினக்காள்
ஆற்றுமுறை யென்கொலறை யாய்.

இ - ள்: ஈசனை, வருத்தம் நீங்கும் உயிரானது நாடி அவ்வை அடையும் முத்திநிலையிலும் பாசம் ஆன்மாவை மறைப்பது என்றுகூறி, அதனால் வேண்டும் பெரும்பயனில் சிறிதும் குறைவின்மையைத் தெளிவிக்கும் சிவஞான தேவரே! அடியேன் தேவரீருக்கு ஆட்செய்யும்படி எப்படி? இதனை அறிவித்தருளுவீராக என்றவாறு.

நை - வருத்தம். ஒழியும் - நீங்கும். தெளிவித்தலைச் சிவஞானமாபாடியத்தில் ஆறுஞ்சூத்திரத்து

Koviloor Digital Library

இரண்டாம் அதிகரணத்திற் காண்க. அறையாய் - கூறியருளுக. (19)

அறைகின்ற சீரிளம் பூரணர்
சேனு வரையர் நச்சர்
நறைகொண்ட தார்ப்பரி மேலார்முன்
னுயவர் நன்மதிக்குங்
குறைகண் டிகழுஞ் சிவஞான
தேவனென் கோதுறுபாப்
பொறைகொண்ட சிந்தை யுவந்தேற்கு
மாலருள் பொற்புறவே.

இ - ள்: உரையாசிரியர் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இளம்பூரணர், சேனுவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலாகவுள்ளவர்கள் செய்தருளிய உரைகளிலே உள்ள குறைகளைப் பரிகரிக்கும் சிவஞானசுவாமிகள், ஒன்றுக்கும் பற்ருத அடியேன் செய்யும் இந்த இரட்டைமணிமாலையின் கண்ணுமுள்ள கோதுறுபாக்களைப் பொறைகொண்ட தம் சிந்தையில் அருள் பொலிவுறுமாறு உவந்து ஏற்றருளுவார்கள் என்றவாறு.

இது சுவாமிகள் அருளிய தொல்காப்பியச்சூத்திர விருத்தியைப் புகழ்ந்தவாருயிற்று. (20)

முற்றிற்று.

Koviloor Digital Library

தனிப்பாக்கள்

[ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர் பாடியன]

திருக்கும் பவத்தை அகற்றுமருள்
செல்வா வருக நால்வேத
சிரமெய்ப் பொருளை உணர்ந்தமுதல்
தேவா வருக எம்முயிரைக்
கருக்கும் வினையை நீக்குகளை
கண்ணே வருக சுவைநிறைந்த
கனியே வருக கருணைரசக்
கரும்பே வருக கருத்தழிந்து
தருக்கும் சமய கோடியெலாந்
தகர்த்துச் சைவம் இனிதோங்கத்
தமிழின் மாபா டியம்வகுத்த
தலைவா வருக சயிலாதி
வருக்கத் துயர்ந்து விளங்குசிந்தா
மணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால் வருக வருகவே. 1

நதியைக் கரந்த சடைப்பெருமான்
நயனத் தீயால் பொடியானோன்
நாள வனசக் கணையுமெய்தா
நலனார் ஞானத் திருவுருவாய்ப்
பொதியக் குறுமா முனிவரத்தால்
புவியில் பிறந்து புகழ்நிறைந்து
பொய்யைத் தணந்து மெய்யுணர்ந்து
புனிதாத் துவித நெறிப்படியே

Koviloor Digital Library

பதியைப் பசுவைப் பாசத்தைப்
பரம மோன நிலையினைப்
படியென் றறியப் பணித்தருளால்
பவசா கரத்தில் உழலாதெம்
மதியைத் திருத்திக் கதியளிக்கும்
வாழ்வே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால் வருக வருகவே. 2

கலைதேர் நமச்சி வாயகுரு
கருணைக் கடலில் திளைத்தாடிக்
கலகப் பாசத் தொடரறுத்துக்
காமத் தறியை அறவீழ்த்தி
அலையுஞ் சமயத் தருக்களைக்கீழ்
அடிவே ரோடும் அகழ்ந்தெறிந்திட்(டு)
அருளின் படாத்தை முகமேற்கொண்(டு)
ஆதி வேதா கமங்களெனும்
தொலையா மணிகள் இருமருங்கும்
தொனிக்கச் சைவ மதம்பொழிந்து
துங்க மோடும் உலகமுற்றும்
சுற்றும் வெற்றி வாரணமே
மலையா தருளு முனிவர்சிகா
மணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால் வருக வருகவே. 3
